3

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

## ஆணை நாள் 02.06.2026

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 11995/E/2023**

| | | |
|---|---|---|
| திரு எஸ்,திருகுகன் | .. | மேல்முறையீட்டாளர் |
| | */எதிர்/* | |
| பொதுத் தகவல் அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், மத்திய சென்னை கோட்டம், சென்னை | .. | பொது அதிகார அமைப்பு |

******

## ஆணை

1) இவ்வாணையத்தின் 22.10.2024 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து, மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் திருமதி சி.பி.வித்யா இவ்வாணையத்தில் 02.06.2026 அன்று ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2) அவ்வறிக்கையில், மேற்படி ஆணையின் முதல் உத்தரவுபடி, மனுதாரர் கோரிய தகவல்கள் அவருக்கு 21.05.2026 அன்று நேரில் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு, அதன் நகலும், மனுதாரர் அதை பெற்றுக் கொண்டு வழங்கிய ஏற்பளிப்பின் நகலும் இணைக்கப்பட்டுள்ளது.

3) மேற்படி ஆணையின் இரண்டாவது உத்தரவுபடி மனுதாரருக்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் தகவல் வழங்கத் தவறிய மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியரின் முன்னாள் நேர்முக உதவியாளர்கள்/ பொதுத் தகவல் அலுவலர்கள், திரு ராஜ்குமார், திரு மணிசேகர், திருமதி லஷ்மி, திருமதி உமா மகேஸ்வரி மற்றும் திருமதி நீலா ஆகியோரிடம் விளக்கங்கள் பெறப்பட்டு, அவை இணைக்கப்பட்டுள்ளது.

4) மேற்படி பொதுத் தகவல் அலுவலர்கள் அளித்துள்ள விளக்கங்களில், மனுதாரர் தனது 6(1) மனுவை அனுப்பிய காலக்கட்டத்தில், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஊழியர் பற்றாக்குறை, நீதிமன்ற வழக்குகள், நில உச்சவரம்பு ஆக்கிரமிப்பு அகற்றம், சட்டம், ஒழுங்கு தொடர்பான கோப்புகள் ஆகியவற்றால் ஏற்பட்ட பணிச்சுமை காரணமாக மனுதாரருக்கு தகவல் வழங்க இயலவில்லை என்றும், இனிவரும் காலங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் வழங்கும் பொறுப்பினை உணர்ந்து நடந்து கொள்வோம் என்றும், தங்களது விளக்கத்தை கருணையுடன் பரிசீலித்து, தங்களை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

5) மேலும் அவ்வறிக்கையில், ஆணையத்தின் 3-வது உத்தரவுபடி மனுதாரருக்கு காலதாமதமாக பதில் வழங்கி, அவருக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தியதற்காக, அவருக்கு 21.05.2026 அன்று இழப்பீடாக ரூபாய் இரண்டாயிரத்துக்கான (ரூ.2000/-) காசோலை நேரடியாக வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டு, அதன் நகலும், மனுதாரர் அதை பெற்றுக் கொண்டு வழங்கிய ஏற்பளிப்பின் நகலும் ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

6) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், மனுதாரருக்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்காத பொதுத் தகவல் அலுவலர்கள் அளித்துள்ள விளக்கத்தை ஏற்கிறது. எனினும், எதிர்காலத்தில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களுக்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்கப்பட வேண்டுமென அப்பொதுத் தகவல் அலுவலர்கள் எச்சரிக்கப்படுகின்றனர்.

7) மேலும், 21.05.2026 அன்று மனுதாரருக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்தில், எழும்பூர் வட்டாட்சியருக்கு மனுதாரரின் கோரிக்கை குறித்து 19.05.2026 அன்று நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், வட்டாட்சியரிடமிருந்து அறிக்கை பெற்றபின் மனுதாரரது கோரிக்கை தொடர்பாக தங்கள் அலுவலகத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பதில் வழங்கப்பட்டுள்ளது.

8) ஆகவே, எழும்பூர் வட்டாட்சியரிடமிருந்து அறிக்கையை பெற்று மனுதாரரது கோரிக்கை தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு, இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து ஆணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 11995/E/2023</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மத்திய சென்னை கோட்டம்,
சென்னை

வருவாய் அலுவலர்,
சென்னை மாவட்டம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.
சென்னை

திரு எஸ்.திருகுகன்,
எண்.10 (பழைய எண்.65/2),
நாராயண நாயக்கன் தெரு,
புதுப்பேட்டை,
சென்னை - 600 002

Copy to: File
CR/PA